# ஜாமக்காரன்
# JAMAKKARAN

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 8
AUGUST 2020 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன் JAMAKKARAN

கர்த்தருக்குள் அன்பான வாசக குடும்பங்களுக்கு,

உங்கள் அனைவருக்கும் கிருபையும், சமாதானமும் பெருகுவதாக.



### அச்சகமும் தேவ கிருபையும்

இம்முறை **இரண்டு மாத** ஜாமக்காரன் பத்திரிகையை **ஒரே கவரில்** வைத்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **கொரோனா கிரு**மி பிரச்சனையினால் நாடு முழுவதும் (லாக் டவுன்) ஊர் அடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டதால் பத்திரிகை அச்சடித்து வெளியிட முடியமா என்ற பெரும் சந்தேக்தில் தடுமாறிய சமயம். பல பிரபல கிறிஸ்தவ பத்திரிகைகள் நிறுத்தப்பட்டது. ஆனால் கர்த்தருடைய பெரும் கிருபையால் அனைத்து (தமிழ் & மலையாளம்) ஜாமக்காரன் வாகர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் எல்லா மாதங்களிலும் ஜாமக்காரன் வெளியிட முடிந்தது. பல பெரிய அச்சக கம்பெனிகளில் எந்த அச்சடிப்பு வேலையும் இல்லாமல் போனதால் பிரிண்டிங் பிரஸ்சை மூடிவிட்டு **வேறுதொழில்** செய்தால் என்ன என்று ஒவ்வொரு அச்சக உரிமையாளர்களும் புதிய தொழில்களை ஆரம்பிக்க தொடங்கிய நிலையில்,

# AUGUST - 2020

ஜாமக்காரன் பத்திரிக்கை ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் சேலத்திலேயே போது கையால் அச்சு எழுத்துக்களை கோர்த்து நடத்தி வந்த **லெட்டர் பிரிண்டிங் பிரஸ்ஸில் ஜாமக்காரன்** பத்திரிகை அனைத்தும் அச்சடித்து குறிப்பிட்ட நாளில் வெளியிட 1969ம் வருடம் முதல் அச்சக உரிமையாளர் ஒருவர் எனக்கு உதவினார். இப்போது அவர் நடத்திய **லெட்டர் பிரஸ்** அவர் தகப்பனாரின் மரணத்துக்கு பிறகு அவர் மகன் திரு. **வேலு** என்பவர் அதே பிரஸ்ஸை **ஆப்செட்** பிரஸ்ஸாக நவீன மிஷின்கள் வாங்கி நடத்த தொடங்கினார். இந்த **கொரோனா கிருமி** நாடு முழுவதும் அனைத்து அச்சக உரிமையாளர்களின் தொழில்களை புரட்டிப்போட்ட சமயத்தில் எல்லா அச்சகங்களும் மூடப்பட்டன. இந்த சூழ்நிலையில் அந்த பழைய அச்சக உரிமையாளரின் மகன் சரியான நேரத்தில் என்னிடத்தில் வந்து ஐயா சென்னையில் நீங்கள் அச்சிட்டு கொண்டிருந்த அச்சகங்கள் மூடிவிட்ட நிலையில் நானே உங்கள் பத்திரிகையை குறிப்பிட்ட காலத்தில் அச்சடித்து தருகிறேன். நானும் தொழில் ஒன்றும் இல்லாமல் பிரஸ்ஸை வெருமனே வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆகவே நான் வேறு வேலை எதுவும் எடுக்காமல் உங்கள் பத்திரிகையை (தமிழ் & மலையாளம்) இரண்டையும் நானே அச்சடித்து தருகிறேன் என்று கேட்டுகொண்டார்.

அவருடைய தகப்பனாரிடம் கண்ட அதே உண்மை, அதே பணிவு அவர் மகனிடம் நான் கண்டதாலும். மேலும் அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் இயேசுவின் மேல் தனிப்பற்றும் நம்பிக்கையும் அவர்கள் வைத்துள்ளதால் நானும் ஜெபித்து கர்த்தரின் அனுமதியோடு சம்மதித்தேன். வேத வசனம் நிறம்பிய நம் ஜாமக்காரன் பத்திரிகையை அவருடைய அச்சடிக்க துடங்கினேன். இதன் மூலம் கர்த்தர் அச்சக உரிமையாளரின் குடும்பத்தையும் ஆசீர்வதித்ததை நாங்கள் கண்டு கர்த்தரை துதித்தோம்.

வாசகர்களாகிய நீங்கள் யாரும் தொடர்ந்து உங்கள் காணிக்கைகளை Online மூலமாகவும் M.O. D.D., Cheque மூலமாகவும் அனுப்பிய பணம் அத்தனையும் வந்து சேர்ந்தது. மிக்க நன்றி. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஒருவருக்காக ஒருவர் தொடர்ந்து ஜெபங்களை ஏறெடுப்போம்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட பலருடைய ஜெப விண்ணப்பங்கள் SMS மூலமாகவும் தொலைபேசி மூலமாகவம் email மூலமாகவும் வந்து சேர்ந்தது. அத்தனை ஜெப விண்ணப்பத்துக்கு தினசரி மூன்று நேரம் விசேஷ ஜெபம் ஏறெடுத்தோம். அந்த ஜெபத்தை கர்த்தர் கேட்டு மரணத்தின் வாசல்வரை போய் உயிரோடு திரும்பியவர்களின் செய்தி கேட்டு கர்த்தரை துதித்தோம். தொடர்ந்தும் ஜெபிப்போம். கர்த்தர் தாமே நம் யாவரையும் நம் குடும்பத்தையும் அந்த பயங்கர வைரஸ் கிருமி தொடாதபடி கர்த்தர் காத்தருள்வாராக . ஆமென்

டாக்டர் **புஷ்பராஜ்**

# இந்திய சுதந்திர தினத்தின் செய்திகள்....



## நம் இந்திய தேசியகொடியின் வரலாறு

1906ம் வருடம் ஆகஸ்ட் 7ம் தேதி நம் இந்தியாவிலிருந்து வங்கதேசம் தனி தேசமாக பிரிய நேரிட்டது. அந்த பிரிவினையை எதிர்த்து அந்த நாட்களில் போராடிய ஒரு போராட்டத்தின் போது முதல் **மூவர்ண கொடி** அறிமுகப்படுத்தப்பட்டது. **காவி, பச்சை** நிறங்களோடு இடையில் இப்போது இருக்கும் வெள்ளை நிறத்துக்கு பதிலாக மஞ்சள் நிறம் தான் இடம் பெற்றிருந்தது. இக்கொடி **கல்கத்தா கொடி** என்று இந்திய வரலாற்றில் பெயர் பெற்றது. இந்த கொடி பிரபலம் அடைந்தபோது ஒவ்வொரு பிராந்தியங்களில் இருந்த வர்களும் ஒவ்வொரு மாதிரியான கொடியை உருவாக்க முனறார்கள்.

சுயாட்சி பேராட்டத்தின்போது **பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார்**, ஆகியோர் இணைந்து புது விதமான தேசிய கொடியை உருவாக்கிய அந்த கொடியில் **பிரிட்டன்** நாட்டு **யூனியன் ஜாக்** கொடியும் சின்னதாக ஒரு மூலையில் இடம்பெற வைத்தார்கள். பலர் அதை விரும்பவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் **சுதந்திர போராட்டம்** பல விதங்களில் இந்தியாவின் பல்வேறு இடங்ளில்வெடித்தன. **வெள்ளையர்களுக்கும், இந்தியர்களுக்கும்** வித்தியாசம் காட்ட ஒரு **பொதுவான கொடி** தேவைப்பட்டது. **சுவாமி விவேகானந்தரின்** சீடரான **நிவேதிதா** இந்தியர்களுக்காக ஒரு கொடியை உருவாக்கினார். ஆனால் அந்த கொடியில் ***வந்தே மாதரம்*** என்ற வார்த்தை **வங்க மொழியில்** இடம்பெற செய்தார், அதையும் பலர் விரும்பவில்லை.

1916ம் ஆண்டில் **ஆந்திர** மாநிலத்தில் **மசூலிப்பட்டினத்தை** சேர்ந்த **பிங்கள வெங்கையா** அவர்கள் எல்லாருக்கும் பொதுவான ஒரு **தேசிய கொடியை** உருவாக்க முனைந்தார். அதைக்குறித்து **மகாத்மா காந்தி** அவர்களிடம் ஆலோசனை கேட்டார். அப்போது **எழுச்சியின்** அடையாளமாகவும், **அடிமைதனத்திலிருந்து** கிடைத்த விடுதலை என்பதையும் குறிப்பிடும் அர்த்தத்தில் கொடியில் **சக்கரக் சின்னத்தை** சேர்க்குமாறு கோட்டுக்கொண்டார். **சிவப்பு, பச்சை**

நிறங்களில் நடுவில் **ராட்டை சக்கரத்தை** ஆதாரமாக கொண்டு ஒரு கொடியை **வெங்கையா** அவர்கள் உருவாக்கினார் . ஆனால் **காந்தி அவர்களுக்கு** அந்த கொடி திருப்தியை உண்டாக்கவில்லை. இந்தியா நாடு பல்வேறு **மதங்களை** தன்னுள் கொண்டது. ஆகவே **அனைத்து மதத்தினரையும்** பிரதிநிதிபடுத்தும் வண்ணம் **வெள்ளை, பச்சை, சிகப்பு** ஆகிய மூன்று நிறங்களுக்கு இடையே **ராட்டை சக்கரம்** இடம் பெறுமாறு கொடி உருவாக்கப்பட்டது. அது தற்காலிகமாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் அந்த ஆரம்ப காலத்திலேயே **காங்கிரஸ்** கட்சியில் கோஷ்டி பூசல் உண்டாகி கொடிகளில் உள்ள கலர் காரணமாக பிரச்சனை உண்டானது. ஒரு வழியாக 1931ம் ஆண்டு **கராச்சி** நகரில் கூடிய காங்கிரஸ் குழு எல்லாரும் ஒரே வகையான கொடியைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதனிடையே **சுபாஷ் சந்திரபோஸ்** அவர்கள் நமது கொடியில் வரைந்த **ராட்டை** சக்கரத்திற்கு பதில் **பாயும் புலியின்** சின்னத்தை வரைந்து உபயோகிக்க தொடங்கினார். ஆனால் **மகாத்மா காந்தி** அவர்கள் இந்த **புலி சின்னம்** பயங்கரவாதத்தை அல்லது **வன்முறையை தூண்டுவதாக** கருதப்படும். ஆகவே அதை நீக்கும்படி கேட்டுக்கொண்டார்.

கடைசியாக இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு இருப்பத்து நான்கு நாட்களுக்கு முன்பாக **இந்திய தேசிய கொடி** முப்பரிமானத்தை அடைந்தது. **காவி** கலர், **பச்சை** ஆகிய நிறங்களுக்கு நடுவே **வெள்ளை** நிறம் உண்டாக்கி அதன் நடுவில் **அசோக** மன்னனின் **தர்ம சக்கரம்** நீல நிறத்தில் இடம் பெற செய்யப்பட்டது. இதுதான் ஆந்திராவின் திரு. **பிங்களா வெங்கையா** அவர்கள் கடைசியாக திருத்தி வடிவமைத்த கொடியே நிரந்தரமான இந்திய தேசிய கொடியின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது.

திரு. **ராஜேந்திர பிரசாத்**, திரு. **மவுலானா அபுல் கலாம் ஆசாத்**, திருமதி **சரோஜினி நாயுடு,** திரு. **சி, ராஜகோபாலாச்சரியார்**, திரு. **கே. எம். முன்ஷி**, திரு. **கே. எம் பனிக்கர்**, டாக்டர் **பி, ஆர், அம்பேத்கர்** அகிய மகத்தான இந்திய தேச தியாகிகளும் தலைவர்களுமான குழுவினர் **அந்த கொடி** தான் இந்திய தேச **சகல மாநிலத்தாரும்** ஒற்றுமையாக உபயோகிக்க வேண்டும். இந்த கொடியை இந்தியா **ஒரே தேசம்** என்ற அடிப்படையிலும் நாட்டுக்காக **இரத்தம்** சிந்திய **தியாகிகளுக்கு** மக்கள் மரியாதை செய்யும் விதமாக இதை **தேசிய கொடியாக** அங்கீகரித்தார்கள்.

இப்போது நாம் உபயோகிக்கும் இந்திய தேசிய கொடி இப்போது இருக்கும் வடிவத்தில் வருவதற்கு முன்பு 22 முறை மாற்றப்பட்டது.

**இந்தியா குடியரசாக** மாறிய 1950ம் ஆண்டு ஜனவரி 26 அன்று இப்போதுள்ள கொடி இந்தியாவின் கொடி தேசிய கொடியாக அதிகாரபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தேசிய கொடியில் மேலே உள்ள

**காவி நிறம்** : நம் தேசத்தின் **வலிமையயையும் வீரத்தையும்** குறிக்கும்

**வெள்ளை நிறம்** : கொடியின் நடுவில் உள்ள வென்மை நிறம் **உண்மை மற்றும் அமைதியை** குறிக்கும்

**பச்சை நிறம் :** நாட்டின் **வளர்ச்சியையும், விவசாய** செழிப்பையும் அறிவிக்கும் வண்ணம் நாடு **மங்களகரமாக** இருப்பதையும் குறிக்கும்

**சக்கரம்** நடுவில் உள்ள **அசோக சக்கரம்** 24 **ஆரங்கள்** கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். இந்த **சக்கரம்** கடல் மற்றும் மேகத்தின் நிறத்தை குறிக்கும். குறிப்பாக **தர்ம சக்கரம்** நாட்டில் **தர்மம்** என்றும் காக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் அர்த்தத்தையும் குறிக்கும்.

ஜாமக்காரன் : வாசகர்கள் யாவரும் இந்திய நாட்டின் பிரஜைகள் ஆகும். அந்த **உரிமை** அந்த எண்ணம் நம் எல்லா மாநிலத்தில் உள்ளவர்களுக்கும், **மாநில** பாகுபாடின்றி **மத பாகுடின்றி** நாம் யாவரும் **பல பாஷைகள்** பேசினாலும் நாம் யாவரும் **இந்தியர்கள்** என்ற மனப்பான்மையுடன் இருக்க வேண்டும்.

**அமெரிக்கா** ஐரோப்பியா **ஆஸ்ட்ரேலியா** நாடுகளில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளிலும் **ஆல்டருக்கு** பின்னால் இரண்டு பக்கமும் **நாட்டின்** கொடியும் அந்த **மகானத்தின்** (Province) கொடியும் வைத்திருப்பார்கள். இந்திய மக்களாகிய நாமும் நம் ஆலயங்களில் சபைகளில் ஆல்டரில் கொடியை வைக்காவிட்டாலும் ஆலயத்தில் இருபுறமும் இந்திய தேசிய கொடியை வைப்பதில் தவறேதும் இல்லை.

**குடியரசு நாள், சுதந்திர நாள்** அன்று அவரவர் **ஆலயங்களிலும்** பள்ளிக் கூடம், **கல்லூரிகளிலும் கொடி கம்பம்** நட்டுவைத்து **கொடியேற்றி மரியாதை** செய்வது நம் தேசத்துக்கு காட்டும் **மரியாதையும்,** நாம் யாவரும் **ஒரே தேசத்தவர்** என்கிற **தேச பக்தியையும்** உண்டாக்கும்.

**இந்த பத்திரிகை ஆகஸ்ட்** மாதம் வெளியிடப்படும் ஜாமக்காரன் ஆனபடியால் மேற்கண்ட விவரங்களும் ஜாமக்காரன் வாசகர்கள், நம் பிள்ளைகள் யாவரும் மேலே வாசித்த நாட்டின் விவரங்களை அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் இவற்றை அறிவித்தேன்.

# கொரோனா கடைசிக் காலத்தின் அடையாளமா ?

Dr. எம். எஸ். வசந்தகுமார்

எப்போதாவது நாம் உபயோகிக்கும் ஒரு பழமொழி **பாம்பென்றால்** படையும் நடுங்கும் என்பதாகும். ஆனால் இன்று **கொரோனா** என்றால் **படை** மாத்திரமல்ல, **முழு உலகமும்** பயந்து நடுங்குகிறது. **கொரோனா** கிருமிகள் **கிறிஸ்தவர்களையும்** விட்டு வைக்கவில்லை. கோவிட் 19 வியாதிக்குட்பட்டு மரித்தவர்கள் பாவம் செய்து **தேவ கோபத்திற்குட்டபட்டவர்கள்** என்று சில உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர். இதனால் சிலரது விசுவாசமும் கூட மரணிக்கிறது. ஆகவே தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் தவறான கருத்துக்களையும், உண்மை காரணங்களையும் தேவன் நமக்குக் காண்பிக்கும் அல்லது **கற்பிக்கும்** விடயங்களையும் வேதாகம வசனத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்ப்போம்.

கொரோனா **கடைசிக் காலத்தின்** அடையாளம் என சில தற்கால கிறிஸ்தவர்கள் பொதுவாக எண்ணுகிறார்கள். இதனால், கொரோனாவோடு **கடைசி காலமும்** வந்துவிட்டது என்றும், இதோடு **உலகமும் அழிந்துவிடும்** என்றும் இப்போது கிறிஸ்தவர்கள் போதிக்கத் தொடங்கியுள்ளனர். இதைபோலவே, அதற்கு முன்பும் உலகில் **யுத்தங்கள், இயற்கை** அனர்த்தங்கள் மற்றும் கொல்லும் கொடிய கொள்ளை நோய்கள் பல ஏற்பட்ட காலங்ளிலும் கிறிஸ்தவர்கள் இவ்விதமாகவே பிரசங்கித்துள்ளனர். ஏனெனில் இவர்கள், வேதாகமம் குறிப்பிடும் **கடைசி காலத்திற்கும் உலகின் முடிவு** காலத்திற்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தைக் கருத்திற் கொள்ளாதவர்களாக இருப்பதினாலேயே உலகில் ஏதாவது ஒரு அழிவு ஏற்பட்டால் உடனடியாகக் **கடைசிக் காலம்** வந்துவிட்டதென்று கலக்கமடைகின்றனர்.

ஆனால் வேதாகம சத்தியத்தினபடி **இயேசு கிறிஸ்துவின்** இரண்டு வருகைகளுக்கு **இடைப்பட்ட காலமே கடைசி காலமாகும்.** மேலும், உலகிலிருந்து **சபை எடுத்துக்கொள்ளப்பட்ட** பின்னர் வரும் அந்தி கிறிஸ்துவின் **ஏழு வருஷ ஆட்சிக் காலமே உலகின் முடிவு** காலமாகும். மத்தேயு 24ஆம் அதிகாரத்தில் இந்த **முடிவு காலத்தைப்பற்றிய** சீடர்களின் கேள்விக்கான பதிலையே இயேசுகிறிஸ்து கொடுத்துள்ளார் (மத் 24:3) இதனால்தான் கி.பி. முதலாம் நூற்றாண்டில் **புதிய ஏற்பட்டுப்** புத்தகங்களை எழுதியவர்கள், தாங்கள் கடைசிக் காலத்தில் வாழ்வதாக குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில், **கடைசிக் காலத்தில்** வரும் மேசியாவாகப் பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட இயேசுகிறிஸ்து மேசியாவாக வந்ததினால் அவருடைய **முதல் வருகையோடு கடைசிக் காலமும்** ஆரம்பமாகிவிட்டதை அவர்கள் அறிந்திருந்தனர்.

இயேசு கிறிஸ்துவின் **முதல் வருகையுடன் கடைசிக் காலம்** ஆரம்பமாகியதினாலேயே அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் **கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்** (1 பேது 1:20) என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தின்படி **இயேசுகிறிஸ்துவின்** முதல் வருகையே **கடைசி காலத்தின் ஆரம்பமாக** உள்ளது. இதைப்போலவே எபிரேய நிரூபத்திலும் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் மனிதனோடு பேசியதைப்பற்றி குறிப்பிடும் போது – **இந்த கடைசி நாட்களில்** குமாரன்மூலமாக நமக்குத் திருவுளம்பற்றினார். (எபி, 1:2) என்றும் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலியைப்பற்றி விளக்கும்போது அவர் தம்மை தாமே பலியிடுகிறதினாலே பாவங்கள் நீக்கும்பொருட்டாக இந்த **கடைசி காலத்தில்** ஒரே தரம் வெளிப்பட்டார். (எபி. 9:26) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இவ்வசனங்கள் கடைசி காலம் ஆரம்பித்ததையே அறியத்தருகின்றன. எனினும் இவைகள் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையைப்பற்றிய குறிப்புகளாக இருப்பதினால் **கடைசி காலம்** அவரது முதல் வருகையிலேயே ஆரம்பமாகியுள்ளதை அறிந்து கொள்கிறோம். இதனால்தான் பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத் ஆவியானவர் அருளப்பட்டது **கடைசி நாட்களில்** நடைபெறும் காரியமாகவே பேதுருவினால் விளக்கப்பட்டுள்ளது. (அப். 2:16-17) இதைப்போலவே அப்போஸ்தலர்களாகிய யோவானும் யாக்கோபும் தங்களுடைய கால மக்களுக்கு எழுதிய நருபங்களில் பிள்ளைகளே **இது கடைசி காலமாயிருக்கிறது.** (1 யோவா 2:18) என்றும் **கடைசி நாட்களிலே** பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். (யாக் 5:3) என்றும் குறிப்பிட்டுள்ளனர். எனவே இப்போழுது **கொரோனா** என்னும் கொடிய கிருமிகள் **கடைசிக் காலத்தைக்** கொண்டுவந்துள்ளன என்று கூறுவது வேதாகம சத்தியத்திற்கு **முரணான** ஒரு போதனையாகவே உள்ளது.

## உலகின் முடிவு கால அடையாளங்கள் எப்போது வரும்?

**கொரோனா** என்னும் **கொடிய கிருமிகள் கடைசிக் காலத்திற்கான அடையாளம் அல்ல** என்றால் **உலகின் முடிவு** காலத்தைப்பற்றிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளிலும் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் முன்னறிவிக்கப்பட்டுள்ள வாதைகளும் கொள்ளை நோய்களும் எப்பொழுது வரும் என்று கிறிஸ்தவர்கள் கேட்பது வழக்கம். இதற்குக் காரணம், இவர்களின் பெரும்பாலானவர்கள் இயேசு கிறிஸ்துவின் **இரண்டாவது வருகை இரண்டு கட்டங்களில்** நடைபெறும் என்பதை அறியாதவர்களாக அல்லது ஏற்றுக்கொள்ளா தவர்களாக அல்லது இதைக் கருத்திற்கொள்ளாதவர்களாக குறிப்பிட்ட இத்தீர்க்கசனங்களை வியாக்கியானம் செய்வதேயாகும்.

ஆனால், வேதாகம சத்தியத்தின்படி , இயேசு கிறிஸ்துவின் **இரண்டாவது** வருகை **இரண்டு கட்டங்களில்** நடைபெறம். அதாவது, **முதல் கட்டத்தில்** உலகில் இருக்கும் தம்முடைய **சபை மக்களை** எடுத்துக்கொள்வதற்காக இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்த வானத்திற்கு வருவார். அச்சமயம் இயேசு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் சரீரப்பிரகாரமாக உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 தெச. 4:16-17) ஆனால் அதன் பின்னர் **ஏழு வருஷங்களுக்கு**

உலகில் இருக்கும் **அந்தி கிறிஸ்துவின்** உலகளாவிய ஆட்சியின் முடிவில் **தம்மோடு இருக்கும் சபைமக்களுடன்** பகிரங்கமாக இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருவார். யூதா.1:14-15, அந்தி கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தை முழுமையாக அழித்துவிட்டு தம்முடைய **ஆயிர வருஷ ஆட்சியை** ஆரம்பிப்பார். (வெளி 11:15) இவற்றில் முதலாவது **இரகசிய வருகை** என்றும் மற்றது **பகிரங்க வருகை** என்றும் தமிழ் கிறிஸ்தவர்களினால் பெயரிடப்பட்டுள்ளது. மேலும் இயேசு கிறிஸ்துவின் **இரகசிய வருகை** எவருக்கும் தெரியாத விதத்தில் **திருடன் வருவதைப்போல** இருக்கும் என்றும் (லூக் 12:39-40) **பகிரங்க வருகை** எல்லாரும் காணும் வகையில் இருக்கும் என்று (வெளி 1:8) வேதாகமம் கூறுகிறது ஏனெனில், **இரகசிய வருகையின்** போதுதான் அவர் பூமிக்கு வருவார். (சக.14:4)

இயேசு கிறிஸ்துவின் **இரண்டாவது வருகை** இரண்டு கட்டங்களில் நடைபெறுவதினால் அவரது மறு வருகையைப்பற்றிய தீர்க்கதரிசனங்களில் **எவைகள்** அவருடைய இரகசிய வருகையின் நடைபெறும் என்பதையும். **எவைகள்** பகிரங்க வருகைக்கு முன்பு நடைபெறும் என்பதையும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் **வேறுபடுத்தி பார்ப்பதில்லை.** இதனால்தான் **பகிரங்க வருகைக்கு** முன்பு நடைபெறுவதாக முன்னறிவிக்கப்பட்டுள்ள காரியங்களை தற்போது நடைபெறுகின்றவைகளாகக் கிறிஸ்தவர்கள் தவறாக கருதுகின்றனர். உண்மையில் இயேசு கிறிஸ்துவின் **இரகசிய வருகை,** எவரும் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று நடைபெறுவதினால் அது **திருடன்** வருகின்ற விதமாக இருக்கும் என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மத்தேயு 24:42-44) இந்த இரகசிய வருகைக்கு **அடையாளங்கள்** கொடுக்கப்படவில்லை. ஏனெனில், **அடையாளங்கள்** கொடுக்கப்பட்டிருந்தால், **இரகசிய வருகை** எவரும் எதிர்பாராத நேரத்தில் நடைபெறும் சம்பவமாக இருக்காதே! அதுமாத்திரமல்ல, அடையாளங்களை வைத்து இலகுவாக வருகையின் காலத்தை அறிந்துகொள்ள கூடியதாகவும் இருக்கும். இதனால்தான் இயேசுகிறிஸ்துவின் வெளிப்படையான இரண்டாம் வருகைக்கான அடையாளங்களாக வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளன, அவை அவரது **பகிரங்க வருகைக்கான** அடையாளங்களாகவே உள்ளன. எனினும் கி.பி .70ம் ஆண்டிலிருந்து உலகில் இல்லாதிருந்த **இஸ்ரவேல்** என்னும் நாடு **மறுபடியுமாக** 1948ம் ஆண்டு **உருவாக்கப்பட்டதை** தம்முடைய மறு வருகையின் காலத்தில் நடைபெறும் **ஒரு அடையாளமாக** இயேசு கிறிஸ்து முன்னறிவித்துள்ளதினால் (மத்.24:32-33) அவருடைய **வருகை சமீபமாயிக்கிறது** என்பதை நாம் தற்போது அறிந்துள்ளோம். ஆனால் உலகிலிருந்து சபை **எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்** என்பதை நாம் அறியோம். ஏனெனில் இதை நமக்கு அறவிப்பது தேவனுடைய சித்தமாக இல்லை. இதனால்தான் **மனுஷ குமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது** நீங்கள் அறியாதிருக்கிற படியால் விழித்திருங்கள். (மத் 25:13) என்று மாத்திரமே இயேசு கிறிஸ்து கூறினார். எனவே தற்போது வந்துள்ளன **கொரோனா கிருமிகளை** வைத்தும் அந்த நாளைக் கணிப்பிட முடியாது.

இயேசு கிறிஸ்து தம்முடைய சபை மக்களை எடுத்துக்கொள்வதற்காக எப்பொழுது வருவார் என்பதை நமக்கு அறிவிப்பது தேவனுடைய சித்தம் இல்லை என்பதினால்தான் **அவர் மானிட வரையறைகளுக்கு உட்பட்டு மனிதனாக இவ்வுலகத்தில வாழ்ந்த காலத்தில் இயேசுவும் அந்த நாளை அறியாதவராகவே இருந்தார்.** ஆனால் அவர் மரித்து உயிர்த்தெழுந்து மகிமையடைந்த பின்னர் அந்த நாளை அறிந்திருந்தாலும் அதை நமக்கு அறியதருவது தேவனுடைய சித்தம் இல்லை என்பதினால்தான், பிதாவனவர் தம்முடைய **ஆதீனத்திலே** வைத்திருக்கிற **காலங்களையும் வேளைகளையும்** அறிகிறது உங்களுக்கு அடுத்தல்ல (அப். 1:7) என்று கூறினார். இதனால் அக்காலம் தற்பொழுது இயேசு கிறிஸ்துவுக்கு தெரியாது என்று நாம் எண்ணலாகாது ஏனெனில் அக்காலம் எது என்று இயேசுவாகிய **தமக்கு** தெரியாது என்று அவர் கூறவில்லை. **அதை அறிகிறது உங்ளுக்கு அடுத்ததல்ல** என்றே கூறினார். ஆனாலும் இயேசு கிறிஸ்துவின் பதில் கடுமையானதாகவே உள்ளது. ஏனெனில் **உங்களுக்கு அடுத்ததல்ல** என்னும் சொற்பிரயோகம். **அது உங்களுடைய வேலை அல்ல** என்று கூறியதாகவே உள்ளது.

ஏனெனில் உலக சரித்திரத்திற்கு தேவன் வைத்திருக்கும் **காலங்களையும் வேளைகளையும்** ஆராய்ந்து அறிவது தேவன் நமக்கு கொடுத்துள்ள வேலை அல்ல. இதனால் தற்கால உலகம் அரசுகளின் காலங்களுக்கும் **இயேசு கிறிஸ்துவின் மறு வருகைக்கும்** நாள் குறித்து **அதை தீர்க்கதரிசனமாக** அறிவிப்பது நாம் செய்ய வேண்டிய வேலை அல்ல. ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் **மறு வருகை எவருக்குமே தெரியாத தெய்வீக இரகசியமாகவே** வைக்கப்பட்டுள்ளது. (மாற். 13:32) இதனால்தான் இதுவரைக்கும் இயேசு கிறிஸ்துவின் **மறு வருகைக்கும்** உலகின் **இறுதிக்கால சம்பவங்களுக்கும்** நாள் குறித்து அறிவிக்கப்பட்ட **தீர்க்கதரிசனங்களில் ஒன்றுகூட நிறைவேறவில்லை.** எனவே இயேசு கிறிஸ்து **மறுபடியும் வரும் நாளை** தேவன் திட்டமிட்டு குறித்துவைத்து உள்ள போதிலும் அது நமக்கு அறியதருவது அவருடைய சித்தம் அல்ல என்பதினால் **தேவன் இரகசியமாக வைத்திருக்கும் காலத்தை** நாம் ஊகிக்கவோ அல்லது **கொரோனா கிருமிகள்** வந்துள்ளதினால் **அக்காலம்** இப்பொழுது வந்துவிட்டது என்று **கூறவோ கூடாது.** ஏனெனில் **இயேசு கிறிஸ்து எப்பொழுது வருவார்** என்பதை அறிந்து கொள்வதை அல்ல. அவர் எப்பொழுது வந்தாலும் அவருடைய வருகைக்கு நாம் **ஆயத்தமாய் இருப்பதையே** அவர் நம்மிடம் **எதிர்பார்க்கிறார்.**

இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு அடைாளமாக **வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுகள்** உலகிலிருந்து **சபை எடுத்துக்கொள்ளப்பட்டபின்னர்** அந்தி கிறிஸ்துவின் **ஆட்சிக் காலத்தில்தான்** நடைபெறும். ஏனெனில் இயேசு கிறிஸ்து மத்தேயு 24:4-36 வசனம் வரை **உலகின் முடிவில்** அவருடைய **பகிரங்க வருகைக்கு** முன்பு **நடைபெறும் காரியங்களையே** முன்னறிவித்துள்ளார். இதனால்தான் இவ்வசனங்களில் இறுதிப் பகுதியில் அதாவது 30ம் வசனத்தில் அப்பொழுது **மனுஷ குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்.** அப்பொமு **மனுஷ குமாரன்**

வல்லமையோடு மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். இவ்வசனத்தின்படி **இயேசு கிறிஸ்துவின் வருகை பூமியில் உள்ள சகல கோத்திரத்தாரும் காண கூடிய விதமாக இருக்கும்** என்பதினால் இது உலகில் இருந்து சபை எடுத்துக்கொள்ளப்படுவதை பற்றிய **முன்னறிப்பாக அல்ல.** அவரது பகிரங்க வருகை பற்றிய **தீர்க்கதரிசனமாகவே உள்ளது.** இதனால்தான் இவைகள் **பாழாக்குகிற அறுவருப்பாகத்** தானியேலினால் முன்னறிவிக்கப்பட்ட **அந்தி கிறிஸ்து** அலயத்தில் இருக்கும்போது நடைபெறும் என்றும் அச்சமயம யுதெயாவில் இருப்பவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் இயேசு கிறிஸ்து அறிவித்துள்ளார். அதாவது **அந்தி கிறிஸ்து** ஆலயத்திற்கு வரும்போது யூதேயாவில் இருப்பவர்களை மலைகளுக்கு ஓடிப்போகும்படி இயேசு கிறிஸ்து கூறுவதினால் இது உலகெங்கும் இருக்கும் சபை மக்களுக்கான அறிவுறுத்தலாக அல்ல. பாழாக்கும் அருவருப்பு **எருசலேம் ஆலயத்தில்** இருக்கும் காலத்தில் **அந்நகரில் வாழும் மக்களுக்கான** சிறப்பான அறிவுறுத்தலாகவே உள்ளது. (மத். 24:15-16) மேலும் பாழாக்குகிற அருவருப்புக்குறித்து இயேசு கிறிஸ்து குறிப்பிடும் விடயம் அந்தி கிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலத்தின் நடுப் பகுதியிலேயே நடைபெறும். எனவே மத்தேயு 24ம் அதிகாரத்தின் **கடைசி காலத்தில்** சபைக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி அல்ல. உலகிலிருந்து **சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு** நடைபெறும் **காரியங்களைப்பற்றியே** இயேசு கிறிஸ்து **முன் அறிவித்துள்ளார்.**

உலகில் இறுதி கால சமபவங்களை முன்னறிவிக்கும் வெளிப்படுத்தல் புத்தகத்தில4,5 அதிகாரங்களில் உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்டு பரலோகத்தில் இருப்பதை காண்பித்த பின்பே 6முதல் 18 அதிகாரம் வரை **அந்தி கிறிஸ்துவின்** ஆட்சி காலத்தைப்பற்றிய தரிசனங்களில் இயேசு கிறிஸ்துவின் **பகிரங்க வருகைக்கான** அடையாளங்களான மத்தேயு 24ம் அதிகரத்தில் சொல்லப்பட்டவைகள் **நிறைவேறும் காட்சிகள்** காண்பிக்கப்பட்டுள்ளன, இதனால்தான் வெளிப்படுத்தல் புத்தகத்தில் முதல் மூன்று அதிகாரங்களிலும் அடிக்கடி இடம் பெறும் **சபை என்னும் சொல்** 4ம் அதிகாரத்திற்கு பின்னர் **கடைசி அதிகாரத்தில்** புத்தகத்தின் **முடிவுரை சபை என்னும் சொல் இடம்பெறவில்லை.** ஏனெனில் 4ம் அதிகாரத்திற்கு பிறகு முன் அறிவிக்கப்பட்ட காரியங்கள் நடைபெறும் போது **உலகத்தில் சபை எதுவும் இருப்பதில்லை.** இதனால்தான் மூன்றாம் அதிகாரம் வரை **சபைகளைப்பற்றிய** தரிசனத்தையும் **சபைகளுக்கான** செய்திகளையும் யோவானுக்கு அறிவித்த இயேசு கிறிஸ்து 4ம் அதிகார ஆரம்பத்தில் **இவைகளுக்கு பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை** உனக்கு காண்பிப்பேன் என்று சொல்லி **அவனை பரலோகத்திற்கு ஏறிவரும்படி** கூறினார். (வெளி. 1:4) இவ்வசனத்தில **இவைகளுக்கு பின்பு** என்னும் சொற் பிரயோகம் **மூலமொழியின்** இலக்கண அமைப்பு முறையின்படி **சபைக்கு பின்பு** என்னும் **அர்த்தத்திலேயே** உள்ளது.

மேலும் வெளிப்படுத்தல் புத்தகத்தை மூன்று பகுதிகளாக பிரித்து காண்பிக்கும் முதலாம் அதிகாரம் 19ம் வசனத்தில் நீ கண்டவைகள் முதலாம் அதிகாரத்தில் யோவான் கண்ட தரிசனத்திலும், இருக்கிறவைகள் என 2ம், 3ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள **உலகில் இருக்கும் சபைகளை** பற்றிய குறிப்பாகவும், **இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்** என்னும் சொற் பிரயோகம் **சபைகளுக்குப் பின்பு** நடப்பவைகளை, அதாவது உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு சம்பவிப்பவைகளையும் குறிக்கின்றது. இதன்படி, 4ஆம் அதிகாரத்திற்குப் பின்னர் சபை உலகத்தில் இருப்பதில்லை என்பதை அறிந்துகொள்கிறோம்.

மத்தேயு 24ஆம் அதிகாரத்திலும், வெளிப்படுத்தல் 6 முதல் 19 வரையிலான அதிகாரங்களிலும் முன்னறிவிக்கப்பட்டுள்ள அனர்த்தங்களும் அழிவுகளும் **உலகில் ஏற்படுவதற்கு முன்பே** சபை உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதினாலேயே என் பொறுமையைக்குறித்துச் சொல்லியே வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் **வரப்போகிற சோதனைக் காலத்திற்கு தப்பும்படி** நானும் உன்னைக் காப்பேன். (வெளி 3:10) என்னும் வாக்குத்தத்தம் **சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.** சபை இயேசு கிறிஸ்துவின் சரீரமாக (1 கொரி 12:27, எபே. 1:23, 5:30 ரோமர் 12:5, கொலோ 1:18) இருப்பதினால், உலகின் இறுதியில் அந்தி கிறிஸ்துவின் காலத்தில் முழு உலகையும் ஒரே நேரத்தில் பாதிக்கும் அழிவுகளுக்கு உட்படுவதில்லை. ஏனெனில், தேவன் நம்மைக் **கோபாக்கினைக்கென்று** நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் **இரட்சிப்படைவதற்கென்று** நியமித்தார். ( 1 தெச. 5:9) இதை சரியானவிதத்தில் புரிந்துகொண்ட தெசலோனிக்கேய சபை மக்கள், பல்வேறுவிதமான உபத்திரவங்களுக்கு ஊடாகச் செல்பவர்களாக இருந்தாலும். இனிவரும் **கோபாக்கினையினின்று** நம்மை நீங்கலாக்கி இரட்சக்கிறவருமாயிருக்கிற இயேசுகிறஸ்து பரலோகத்லிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். (1 தெச 1:10) எனவே, கிறிஸ்தவர்ளாகிய நாம் இயேசு கிறிஸ்துவின் **பகிரங்க வருகைக்கான அடைாளங்களை ஆராய்பவர்களாக இல்லாமல், உலகிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளப்படும்** ஆனந்தமான நாளை **ஆவலோடு எதிர்பார்த்தவர்களாக** அதற்கான **ஆயத்தத்தோடு** வாழவேண்டும். ஏனெனில், மெய்க் கிறிஸ்தவர்கள் **கோபக் கலசத்தை** அல்ல **நீதியின் கிரீடத்தை** (2 தீமோ 4:8) எதிர்பார்த்து வாழ்பவர்கள்.

## உலகின் முடிவுகால அடையாளங்கள் எப்படி இருக்கும்.

**அந்தி கிறிஸ்துவின்** ஆட்சிக் காலத்தில் வரும் **உலகின் முடிவுகளின்** சம்பவங்களாக குறிப்பிடப்பட்டுள்ளவைகள் உலகின் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை **காலத்திற்கு காலம் நடைபெற்றவைகளாகவும் உள்ளன.** அதாவது **இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கான** அடையாளங்களான **யுத்தம், பஞ்சம், கொள்ளை நோய், இயற்கை அனர்த்தம்** ஆகியன (மத் 24:6-7) இவைகள் யாவும் இப்போதுதான் உலகில்

நடைபெறுகின்றன என்று சொல்லமுடியாது. ஏனெனில் உலகின் முதல் மனிதரான **ஆதாமும் ஏவாளும்** தேவனுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்த காலத்திலிருந்து இன்று வரை இவைகள் காலத்திற்கு காலம் வெவ்வேறு பிரதேசங்களில் நடைபெற்றுள்ளன.

ஆனால் இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கான அடையாளங்களாக இவைகள் ஏற்படும்போது, உலகின் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மாத்திரமல்ல, முழு உலகிலும் பெரும்பாலானவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் நடைபெறும். இதனால்தான் **உலகிலிருந்து சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர்** இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கு முன்பாக நடைபெறும **யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள்** என்பன உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான **மிகுந்த உபத்திரவம்** (மத் 24:21) என்னும் **இவைகள் முழு உலகிலும்** நடைபெறும் (வெளி. 14:2-11) என்றும் இவற்றினால் பூமியில் வாழும் மக்களில் காற்பங்கினர்,(வெளி 6:8) அல்லது **மூன்றில் ஒரு பங்கினர்** (வெளி 6:18 9:15) **கொல்லப்படுவார்கள்** (வெளி 6:8) என்றும் வேதாகமம் கூறுகின்றது. மேலும் இவைகள் **மூன்றரை வருஷ காலம்** தொடர்ச்சியாக மக்களை துன்புறுத்தும்கொடிய வாதைகளாக இருக்கும். (தானி. 9:27) இதனால்தான் **அக்காலத்தின் நாட்கள் குறைக்கப்பட்டிருப்ப தாகவும்** இல்லையென்றால் அக்காலத்தில் ஒருவராலும் உயிரோடு இருக்க முடியாது என்றும் இயேசு கிறிஸ்து தெரிவித்துள்ளார். மத். 24:22) ஆனால் இன்று இந்த கொரோனா உட்பட இதுவரையில் உலகில் ஏற்பட்ட **யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்களினால்** முழு உலகமும் ஒரே நேரத்தில் இந்த அளவுக்குப் பாதிக்கப்படவில்லை.

மேலும் வருகைக்கான அடையாளங்களாக குறிப்பிடப்பட்டுள்ளவைகள் இனி வரவிருக்கும் கோபாக்கினையாக (1 தெச. 1:10) இருப்பதினால், எதிர்காலத்தில் வரும் உபத்திரங்களாகவே உள்ளன. ஏனெனில், புதிய ஏற்பாட்டில் கோபாக்கினையைக் குறிப்பிடும் சொல் **எப்பொழும் பாவிகளின்மீதுதான்** தேவனுடைய இறுதி நியாயத் தீர்ப்பைக் குறிப்பிடுவதற்கே உபயோகிக்கப்பட்டுள்ளது. **இச்சொல்** ஒருபோதும் **தற்கால உலகில் கிறிஸ்தவர்களுக்கு** ஏற்படும் உபத்திரவங்களைக் குறிப்பிடுவதற்கு **உபயோகிக்கப்பட வில்லை.** மேலும் இஸ்ரவேல் மக்களுடன் தேவன் செய்திருந்த உடன்படிக்கைக்கு உட்பட்ட விதத்திலேயே பழைய ஏற்பாட்டு காலத்தில் பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், யுத்தங்கள், அடிமைத்தனம் என்னும் இவ்வுலக காரியங்களில் **தேவனுடைய கோபம் வெளிப்பட்டது.** ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உலகின் இறுதி நியாயத்திற்குபின் பின்னர் வரும் தண்டனையாகவே தேவனுடைய கோபம் உள்ளது. இதனால் இப்பொழுது வந்துள்ள **கொரேனா கிருமிகள் தேவனுடைய கோபத்தினால்** வந்ததவைகள் என்று கூறமுடியாது.

வேதாகம சத்தியத்தின்படி மனிதனின் பாவம் அவனை மாத்தரமல்ல, பூமியையும் பாதித்து (ஆதி. 3:17) இதனால்தான் **கொரேனாவை** போன்ற கொடிய கிருமிகள் **காலத்திற்கு காலம் பலரைக் கொன்று குவித்துள்ளது.** உதாரணத்திற்கு கி. பி. 165ல் **அன்தோநைன்** (Antonine) என்னும் **வாதையில் சின்ன ஆசியா, எகிப்து, கிரேக்கம், இத்தாலி** என்னும்

நாடுகளில் **5 மில்லியன்** மக்கள் மரித்தனர். அதன்பின்பு கி.பி. 541 -542 ஏற்பட்ட **ஜஸ்னியன்** (Jstinian) என்னும் வாதையில் மத்திய தரைக்கடலுக்கு கிழக்கு பகுதியிலிருந்த நாடுகளில் **25 மில்லியன் மக்கள் மரித்தனர்.** மேலும் கி.பி. 1346 - 53ல் **ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா** என்னும் கண்டங்களில் ஏற்பட்ட **கறுப்பு வாதையில் 200 மில்லியன் மக்கள் மரித்தனர்.** அதன்பின்னர் 1852 -1860ல் **ஆசியா, ஐரேப்பா, அமெரிக்கா, ஆப்பரிக்கா கண்டங்களில்** ஏற்பட்ட **கொலோரா காய்ச்சலினால் ஒரு மில்லியன் மக்களும்** 1889 -1890ல் ஏற்பட்ட **ரஷ்யன் காய்ச்சலில்** உலகெங்கும் **1 மில்லியன் மக்களும்,** 1910- 1911 ல் ஏற்பட்ட **கொலோரா காய்ச்சலில்** உலகில் **8 லட்சத்திற்கும்** அதிகமானவர்களும் 1918-1920ல் ஏற்பட்ட **ஸ்பானிய காய்ச்சலில்** உலகில் **50 மில்லியன் மக்களும்** 1956 -1968ல் ஏற்பட்ட **ஆசிய காய்ச்சலில் சீனா, சிங்கப்பூர், ஹாங்காங், அமெரிக்கா** என்னும் நாடுகளில் **2 மில்லியன் மக்களும்** 1968ல் ஏற்பட்ட **ஹொங்காங் காய்ச்சலில்** சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ், இந்தியா ஆஸ்திரேலியா, அமெரிக்க என்னும் நாடுகளிலும் ஐரோப்பாவிலும் **ஒரு மில்லியன் மக்களும் மரித்துள்ளனர்.** இதை போலவே அன்மை கால சரித்திரத்தில் 2001ல் **அந்தராக்ஸ்** 2002ல் **வெட்நைல்,** 2003ல் **சார்ஸ்,** 2006ல் **ஈகோலி,** 2014ல் **ஈபோலா,** 2016ல் **ஸீக்கா** என்னும் கிருமிகள் உலகில் அநேகரை பலிகொண்டதோடு 2005ல் **பறவை காய்ச்சல்** 2009ல் **பன்றிகாய்ச்சலில்** பலரை தாக்கியது. தற்பொழுது **கொரோனா** என்னும் கிருமி பலரை கொன்றுள்ளதோடு **உயிரோடிருக்கும் அனைவருக்கும மரண பயத்தை ஏற்படுத்தியுள்ளது.**

இதுவரை உள்ள காலத்தில் உலகில் ஏற்பட்ட **கொள்ளை நோய்களைப் பற்றிய சரித்திரத்தை** சரியான விதத்தில் அறிந்திருந்தால், இவைகள் **கடைசி கால அடையாளங்களாக** அல்ல, **ஆரம்ப காலத்தில் இருந்தே** இப்படப்பட்ட கொள்ளை நோய்கள் இருந்தன என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இதைப்போலவே அரம்ப காலத்திலிருந்தே உலகில் **பல யுத்தங்கள்** நடைபெற்றுள்ளன. இவற்றில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அன்மை காலத்தில் நடைபெற்ற முதலாம் உலக யுத்தத்தில் **22மில்லியன்** மக்களும், 2ம் உலக யுத்தத்தில் **85 மில்லியன்** மக்களும் **மரித்துள்ளனர்.** இதைப்போலவே இயற்கை அனர்த்தங்களுக்கு உலகில் ஆரம்ப காலத்தில் இருந்து ஏற்பட்டு உள்ளன. இதற்கெல்லாம் காரணம், **மனிதர்களாகிய நாம்** பாவிகளாகவும், நாம் வாழும் மானிட உலகம் பாவத்தினால் பாதிக்கப்பட்டதாகவும் இருப்பதேயாகும். (ரோமர் 8:20,21) மேலும், **மனிதர்கள் பாவிகளாக** இருப்பதினால்தான் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டுபவர்களாகவும், சண்டை பிடிப்பவர்களாகவும் இருக்கின்றனர். (யாக் 4:1) உலகில் ஏற்பட்ட சகல யுத்தங்களுக்கும் இதுவே காரணம். இதைப்போலவே, **மானிட பாவத்தினால்** பூமி பாதிக்கப்பட்டதினாலேயே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. உண்மையில் உலகின்துயரங்கள் அனைத்தும் **மானிட பாவத்தின்** விளைவாகவே உள்ளன. இவை உலக ஆரம்பத்திலிருந்து இன்றுவரை காலத்திற்குக் காலமாக வெவ்வேறு பிரதேசங்களில்

நடைபெற்றுள்ளதினால் இன்று நடைபெறும் அழிவுகளில் ஒன்றை மாத்திரம் கடைசி காலத்திற்கான அடையாளம் என்று கூற முடியாது.

இதுவரை உலகில் ஏற்பட்ட அழிவுகளைவிட தற்போது வந்துள்ள **கொரோனா கிருமிகள்** அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றும் இதனால் இதுவே கடைசி காலத்திற்கான அடையாளம் என்று தற்காலத்தில பெரும்பாலான கிறிஸ்தவர்கள நம்புகின்றனர். ஆனால் நாம் ஏற்கனவே பார்த்தபடி இதற்கு முற்பட்ட காலத்தில் வந்த கொள்ளை நோய்கள் தற்போது ஏற்பட்டுள்ளதைவிட **அதிக அளவு மக்கள் மரித்துள்ளனர்.** சிலர் வாதைகளில் பல மில்லியன் **மக்கள் மரித்துள்ளனர்.** ஆனால், **கொரோன கிருமிகளினால்** மரித்தவர்களின் எண்ணிக்கை **ஒரு சில லட்சங்காகவே** உள்ளன. ஆனால், இக்கிருமி **விமானங்களையே பறக்கவிடாமல்** செய்துவிட்டன, மக்களின் அன்றாட வாழ்வை முழுமையாக பாதிக்கும் விதத்தில் அனைவரையும் **வீட்டுக்குள்ளேயே அடைத்துவிட்டன,** எல்லாவற்றிக்கும் மேலாக **ஆலயங்களையே மூடிவிட்டன** என்று புலம்பும் கிறிஸ்தவர்கள அதிகரித்துவிட்டனர்.

ஆனால், இவர்கள் இதுவரை அக்கால கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தை அறியாதவர்ளாக, முன்னோறும்போதும் முன் எப்போதும் இல்லாத விதத்தில இப்போது **பாதிப்புகள் அதிகமாக** உள்ளதாக கருதுகின்றனர். ஆனால் **முன்பு வாதைகள் வந்த காலத்தில்** இன்றைக்கு இருப்பதை போல **விமானத்தின் மூலமான** உலகலாவிய பிரயாணங்கள் இருக்கவில்லை. **உலகின்ஒரு மூலையில் நடப்பவற்றை** உடனடியாக அறிந்துகொள்ளக்கூடிய வசதிகளும் இருக்கவில்லை. இதனால் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது போன்ற உடனடியான உலகலாவிய பாதிப்பு முன்பு ஏற்படவில்லை என்றாலும், அக்காலத்தில் **கப்பற் பிரயாணங்கள்** நோய் கிருமிகளை **ஓரிடத்தில் இருந்து** இன்னுமொரு இடத்திற்கு **கொண்டு சென்றன.** மேலும், குறிப்பிட்ட நோய்களுக்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் வரை அவற்றின் தாக்கமும் பரவலும் இருந்தது. மாத்திரமல்ல, இன்றைக்கு இப்போதுள்ளது போன்ற கட்டுப்பாடுகள், அதாவது **வீட்டுக்குள்ளேயே இருத்தல், முகமூடி அணிதல், கைகளை கழுவுதல், வியாதிப்பட்டவரை தனிமைப்படுத்துதல்** போன்ற காரியங்கள் அக்காலத்தில் இருந்தன. இதனால் கிறிஸ்தவர்களுக்கு ஆலய வழிபாடுகள் இல்லாத நிலையும் ஏற்பட்டது.

மேலும், கொள்ளை நோய்கள் ஏற்பட்ட காலங்களில் மாத்திரமல்ல, இயற்கை அனர்த்தங்ள், யுத்தங்கள், அரசின் எதிர்புகள், உபத்திரவங்கள் ஏற்பட்ட காலங்களிலும் **பாதிப்புகள் ஏற்பட்ட பிரதேசங்களில் ஆலயங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மூடப்பட்டிருந்தன.** எல்லாவற்றிக்கும் மேலாக, முதல் மூன்று நூற்றாண்டுகளும் ரோம அரசின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட அவலங்களும், அழிவுகளும் கிறிஸ்தவத்தையே இல்லாமாக்கும் அளவுக்கு மிகவும் கொடூரமானவைகளாக இருந்தன. எனவே என்றைக்குமே இல்லாத காரியங்களை இப்போது வந்துள்ள **கொரோனா** செய்துவிட்டது என்று கூற முடியாது. ஏனெனில் **இக்கிருமிகள் கடைசி காலத்திற்கான அடையாளம் அல்ல.**

# முக்கிய அவசர அறிவிப்பு



இந்திய மிஷனரி பணி ஆதரவாளர்களே!

அறுவடையின் ஆண்டவரது பெயரால் வாழ்த்துக்கள். இந்த அகிலவுலகப் பேரழிவிலிருந்து சர்வ வல்ல தேவன் உங்களையும் உங்களுடையவர்களையும் பாதுகாப்பாராக!

இந்திய மிஷனரி இயக்கங்களின் சார்பில் எழுதப்படும் **ஒரு அவசர கால கடிதம்** இது. எல்லாருக்குமே இது இக்கட்டான காலம்தான். ஆனாலும் தொழிடங்களில் தொலைந்து போனோர்களை சந்தித்து ஆசீர்வதிப்பதற்காக **தங்கள் வசதிகளை துறந்து உயிரைப் பணயம்** வைத்து முன்சென்றுள்ள **மிஷனரிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்**. உடல்நலக்கேடு தவிர்த்து, **பொருளாதார நெருக்கடி அனைத்து வட்டாரங்களையும்** வெகுவாய் பாதித்துள்ளது. இவற்றில் பெருமளவு பாதிப்புக்குள்ளாயிருப்பது **மிஷனரி ஊழியச் சங்கங்களாகும்.** ஏற்கனவே நமது பல மிஷனரி நிறுவனங்கள் **பண நெருக்கடிக்கு** ஆளாகியுள்ளன. அந்த நிலைமையை **கொரோனா** தொற்று நோய் இன்னும் மோசமாக்கிவிட்டது. மிஷனரிகள் ஊழியம் செய்யும் **கள நிலையை குறித்து** நேரடி அறிவுடன் இவ்வரிகளை எழுதுகிறேன். 1971 முதல் 33 ஆண்டுகள் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை BYM அதின் நிறுவனராகத் தலைமை தாங்கி நான் நடத்தி வந்தததை உங்களில் பலரும் அறிவீர்கள். இக்கடிதத்தை வாசிக்கும்போது உங்களோடும் உங்கள் குடும்பத்தினரோடும் தேவன் பேசுவாராக.

நமது மிஷனரி நிறுவனங்கள் பலவற்றிற்கு **இருப்புத் தொகை என்று அதிகம் கிடையாது.** கைக்கும் வாய்க்கும் என்பதுதான் நிலை. சமீபத்தில் **பெரிய மிஷனரி நிறுவனம்** ஒன்று **அம்மாதத்தின் 10ம் தேதிதான் ஊழியருக்கு சம்பளம் கொடுத்துள்ளது. கிறிஸ்தவ இல்லங்களைச் சந்தித்து** காணிக்கை சேகரித்து அனுப்பும் **தன்னார்வலர்களையே** மாதாந்திர வருவாய்க்காய் நிறுவனங்கள் பெருமளவு சார்ந்திருக்கின்றன. மிஷனரி பணிக்கு

**பணம் திரட்டும் இவர்களையெல்லாம் தேசிய ஊரடங்கு முடக்கமாக்கிவிட்டது.** 2020 **ஏப்ரல் மாதம்** அல்லது வரும் ஒவ்வொரு மாதங்களிலும் சம்பளத்தை ஊழியருக்கு எப்படி அனுப்புவோமோ என்ற கலக்கம் ஊழியத் தலைவர்களுக்கு இல்லாமலில்லை. **எலியா குடித்து வந்த ஆறு வற்றவில்லையா?** பஞ்சகாலத்தில் ரொட்டியையும் இறட்சியையும் கொண்டுவந்த **காகங்கள்** தாங்களே அவற்றை சாப்பிட்டுவிடாமல் அவற்றை **எலியாவுக்கு பத்திரமாய்க் கொண்டுவந்தது,** எனக்கு வியப்புதான். (1 இரா. 17:5-7) அந்த கறித் துண்டை **ஒரு புறா** கொண்டுவந்திருந்தால் அவ்வளவு ஆச்சரியப்படமாட்டேன். மாம்ச பட்சிணியாகிய **காகம்** அதை எப்படி கொண்டு வந்ததோ? நண்பரே இவ்விதக் காலங்களில் கர்த்தர் உபயோகிக்கும் **காகங்களாய் மிஷனரிகளைப் போஷிக்க** அவர் **உங்களை அழைக்கிறார்.** வேகமாய் **ஆறு வற்றிக்கொண்டிருக்கிறது.** எலியா போன்று சுற்றித்திரியும் **மிஷனரிகளுக்கு ஒரு கலசம் தண்ணீர்,** நீங்கள்தான் தர வேண்டும். ( மத். 10:41,42) நீங்கள் ஒரு விதவையாயிருந்தாலும் **தமது ஊழியரை பராமரிக்க** தேவன் உங்களை எதிர்பார்க்கிறார். (1 இரா. 17:8,9) உங்களிடம் தற்சமயம் உங்கள் தேவைகளுக்கு மட்டும் போதுமானதாக இருக்கலாம். மேலும் உங்களுக்கு இல்லாதுமிருக்கலாம். கவலை வேண்டாம். **முதல் அடை தேவனது ஊழியருக்குப் போகட்டும்.** அதன்பின் உங்கள் தேவைகளுக்கு அவர் செய்யும் அற்புதத்தை காண்பீர்கள். (வச. 10-16)

தங்களது நிறுவனங்களிலிருந்து வரும் **மாதாந்திர உதவித்** தொகையை மட்டுமே பெரும்பாலான முன்னணி மிஷனரிகள் சார்ந்திருக்கின்றனர். அநேகரது குடுபங்களிலிருந்து உதவி எதிர்பார்க்க முடிவதில்லை. மிஷனரி ஊழியம்செய்யும் களங்களில் புதிதாய் எழுப்பப்பட்ட **சபைகளின் விசுவாசிகள்** யாவரும் பிரதானமாகப் **புறவினத்தாரிடமிருந்து** வந்தவர்கள். அவர்களின் அநேகர் **பரம ஏழைகள்.** அவர்கள் செல்வம் படைத்த கிறிஸ்தவர்களை கொண்ட நகரச் Town சபையினர் போலல்ல. **காயு** என்பவருக்கு அப்போஸ்தலன் யோவான் எழுதிய ஆலோசனை இங்கு பொருத்தமாக இருக்கும். பிரியமானவர்களே! நீர் அவர்களை **தேவனுக்கு உகந்த முறையில் அனுப்பி வைத்தால்** நலம். ஏனெனில் அவர்கள் **புறவினத்தாரிடம்** ஒன்றும் வாங்காமலும் எதிர்பார்க்காமலும் அவரது பெயரின் பொருட்டு புறப்பட்டுப் போனார்கள. எனவே நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி **அப்படிப்பட்டவர்களுக்கு உதவுவது நமது கடன்** ( 3 யோ 5-8) தங்களது **குமாரர் குமாரத்திகளின்** படிப்பு மற்றும் திருமணத்திற்கான பெரும் தொகைகளைத் தங்கள் மிஷனரி நிறுவனங்களிலிருந்து

**முன்பணமாய்** வாங்கிக் கொண்டதால் மிஷனரிகள் பலர் மீது **கடன் சுமை** நிறைய இருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு நிலைமை அவர்களை இன்னும் மோசமாக்கியுள்ளது.

இந்திய மிஷனரி நிறுவனங்களில் பல **தென்னகத்திலிருந்து தோன்றியவை.** புதிதாய் ஆதரவாளர் பலரை சேர்க்கவும் **களத் திட்டங்களுக்கு பணம் திரட்டவும்** இவர்கள் யாவரும் தங்களது **மே மாத வருடாந்திர மாநில முகாம்களை** சார்ந்திருக்கின்றனர்.

இன்றுள்ள கொரோனா நிலையில் இவ்வித வருடாந்திர கூடுகைகளை கூடுவதற்கே அனுமதியிலலை, அதனால் மாநில முகாம்களை வெற்றிகரமாய் நடத்துவது சாத்தியமாகத் தெரியவில்லை. **அச்சடிப்பதிலும்** பட்டுவாடா செய்வதிலும் ஏற்பட்டுள்ள **தடங்கல்களினால்** ஊழிய முன்னேற்றத்திற்கு அனுகூலமாயிருக்கும் இவர்களின் **மாதாந்திர பத்திரிகைளின்** ஏப்ரல் மாத இதழையும் பல நிறுவனங்கள் **இன்னும் அனுப்பிவைக்க முடியவில்லை.**

மிஷனிரி பணி ஆதரவாளர்களில் பெருவாரியானோர் **நடுத்தர வருவாயினர்.** இவர்களிலும் பலர் **வாராந்திர** அல்லது இருவாராந்திர சம்பளத்தை எதிர் நோக்கியிருப்பவர்கள். இவ்வகையினரது குடும்பங்கள் நெருக்கடியிலுள்ளன. **மிஷனரிகளை** தாங்குவதில் **முக்கிய பங்கு வகிக்கும் வியாபாரிகள் சமுதாயமும்** கடினமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. எப்படியிருந்தாலும், தங்களது **கொடிய தரித்திரத்திலும்** பரிபூரண சந்தோஷத்துடன் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்த **மக்கெதோனியக் கிறிஸ்தவர்கள் நமக்கு முன் நிற்கின்றனர்.** ( 2 கொரி 8:1-3)

நான் கீழே வரிசைப்படுத்தியுள்ள ஆலோசனைகளைக் கவனமாய்க் சிந்தித்துப் பார்க்கும்படி எனது உடன் கிறிஸ்தவர்களை வருந்திக்கேட்கிறேன்.

1. பண உதவி கேட்டு மிஷனரி **நிறுவனங்களிலிருந்து** கடிதங்கள் வரக் காத்திராதேயுங்கள். நீங்கள் வழக்கமாய் அனுப்பும் காணிக்கையை **50 சதவீதாமாவது அதிகரித்து வங்கி** மூலம் Online Transfer பண்ணுங்கள். **உங்கள் சேமிப்பிலிருந்து** கூட பணம் எடுக்கத் தயங்காதிருங்கள். நிரந்தரவைப்பு Fixed Deposit ஒன்றினைக் கூட நீங்கள் காலிபண்ணலாம். **சந்திக்கப்படாதோருக்கும்** சபையிலில்லாதோருக்கும் **நற்செய்தியைச்** சுமந்துசெல்வோரைத் தாங்காத பணம் இருந்து எதற்கு? தனது உறுப்பினரல்லா தோருக்காய்ப் பிரதானமாய்ச் செயல்படவேண்டிய ஒரே சங்கம் திருச்சபைதானா?

2. **பணம் இல்லாவிடில்** உங்கள் **நகை ஒன்றை** மிஷனரி பணிக்காய் **விற்கலாமே.** கூடாதா என்ன? இன்றையச் சந்தை நிலவரப்படி தங்க நகைக்கு நல்ல விலையும் கிடைக்கும்.

இப்படித்தானே பரலோகில் (பொக்கிஷம்) சொத்து சேர்க்கமுடியும்? (மத். 19-21) லூக் 12:33,34) சகோதரிகள் தங்கள் **ஆஸ்திகளால்** இயேசுவிக்கு உதவிசெய்த யோவானான் மற்றும் **சூசன்னாள்** போலாக்குங்கள் (லூக் 8:3) **தடித்த வடகயிறு** போன்ற **தங்கச் சங்கலிகளை கழுத்தில் சுமந்து திரியாதீர்கள்.** தங்கள் கழுத்தையே முன்னணிப் பணிக்காய்க் கொடுத்துவிடுவோருக்கு **அவற்றை காணிக்கையாக்குங்கள்** (ரோ. 16:3-4) **பிரிஸ்கில்லா ளுடன்** நின்ற ஆக்கில்லாவைப் போல மிஷனரிப்பணிக் காரியங்களில் உங்களோடு தோள்கொடுத்து நிற்க உங்கள் **கணவரை ஈர்த்திடுங்கள்**

3 **மிஷனரிகளை** தாங்கிவரும் சில சபைகளுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். சபையாரே இதில் திருப்பியடையாதீர்கள். உங்கள் சபைப பணங்களிலிருந்து **கணிசமான அளவை** மிஷனரி நிறுவனங்களுக்கு அனுப்பி வையுங்கள். பிரம்மாண்டமான **கட்டடங்கள் கட்டச் சேர்த்துவைத்துள்ள தொகைளை** இவைகளுக்காய் பயன்படுத்துங்கள். நான் அடிக்கடி சொல்லிவருகிறபடி பெரிய **பெரிய கட்டிடங்கள்** இந்திய போன்றதொரு நாட்டில் இனிவரும் காலங்களில் **அதிகப் பயனும் தராது.** பாதுகாப்பாகவும் இருக்காது. கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். **அந்திக் கிறிஸ்துவினிடம் நமது பணம்** சிக்கிவிடக்கூடாது. தலையாகிய கிறிஸ்துவினால் கடிந்துகொள்ளப்படாத இரண்டே சபைகள் **மிஷனரிச் சிந்தையுள்ளவையே** (வெளி 2:8-11 3:7-13) நெடுகவே **மிஷனரி பவுலைத் தாங்கி** அவரது உபத்திரவத்தில் அவருக்குக் கைகொடுத்த **பிலிப்பிய சபையைப்போல** இருங்கள் (பிலி. 4:14-18) இந்தச் சபையினருக்குத்தான் என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார் என அப்போஸ்தலன் உறுதியளித்தார். (வச 19) இது நிபந்தனையுள்ள வாக்கு. **மிஷனரிகளின் குறைச்சலை** நீங்கள் நிவர்த்தி செய்தால் தேவன் நிறைவாக்குவார். (வச. 16,19)

4. இதுவரை மிஷனரி நிறுவனம் எதற்கும் நீங்கள் உதவி தராதவராயிருந்தால் இவ்வித நிறுவனங்களைத் தாங்கிவரும் உங்கள் கிறிஸ்தவ நண்பர்களிடமிருந்து அவைகளின் **வங்கி விபரங்களை** கேட்டறிந்து கிரமமான மிஷனரிப்பணி ஆதரவாளராய்ச் சேர்த்துவிடுங்கள்

இக்கடிதத்தில் ஒரு மூத்த சகோதரனாய் (74) நான் எழுதியுதியுள்ளவற்றை நீங்கள் பின்பற்றினால் பரலோகத்தில் நாம் சந்திக்கும் போது R. ஸ்டேன்லியாகிய எனக்கு நன்றி சொல்வீர்கள் (பிலி. 4:3)

– கிறிஸ்துவின் அன்பில் ஸ்டான்லி

## மிஷனரி ஊழிய ஸ்தாபனங்களின் வங்கி (Bank) விபரம்)

| | | | |
|---|---|---|---|
| 1) **FMPB** Chennai : | Name | : | Friends Missionary Prayer Band |
| | Bank | : | State Bank of India (SBI) |
| | A/c. No. | : | 10402752621 |
| | Branch | : | Ambattur ( Chennai) |
| | IFS Code | : | SBIN0000987 |
| | email | : | recelptsfinance@fmpb.org |
| | whatsapp | : | 9444396217 |
| 2) **IEM** Bangalore : | Name | : | Indian Evangelical Mission |
| | Bank | : | State Bank of India (SBI) |
| | A/c. No. | : | 10977242162 |
| | Branch | : | Bangalore |
| | IFS Code | : | SBIN0000813 |
| | email | : | finance@iemoutreach.org |
| | SMS | : | 9965747672 |
| 3) **BYM** | Name | : | Blessing Youth Mission |
| | Bank | : | State Bank of India (SBI) |
| | A/c. No. | : | 37268642054 |
| | Branch | : | Siruthozhil. Vellore |
| | IFS Code | : | SBIN0007274 |
| 4) **Tribel Mission** : | Name | : | Dr. K. Muraldhar |
| | Bank | : | The Catholic Syrian Bank Ltd., |
| | A/c No. | : | 0156-00706354-190001 |
| | Branch | : | Perubavoor |
| | IFS Code | : | CSBK0000156 |
| | email | : | tribalmission@hotmail.com |
| 5) **Vishvavani** : | Bro. Emil Jaba Singh அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. | | |
| | Name | : | Vishwavani |
| | Bank | : | State Bank of India |
| | A/c No. | : | 10151750252 |
| | Branch | : | Amanjikarai, Chennai |
| | IFS Code | : | SBIN0003273 |
| | email | : | vishwavaninet@vishwavani.org |
| | Mobile | : | 9444455646 |

மேலே குறிப்பிட்ட **மிஷனரி ஸ்தாபனங்களைக்** குறித்தும் அதன் **மிஷனரி பணிதளங்களைக்** குறித்தும் நான் **நேரில் சென்று அறிந்தபடியாலும்.** இவர்களுக்கு கிடைக்கும் காணிக்கைகளை சரியான விதத்தில் ஆடிட்டர் கணக்கை சரிபார்த்து

அரசாங்கத்துக்கும் நீங்கள் அனுப்பிய காணிக்கை விவரங்களை காண்பித்து முறைப்படி குறிப்பிட்ட ஊழியங்களுக்கு மாத்திரம் செலவழிக்கிறார்கள் என்பதை நானே நேரில் கண்டு அறிந்தபடியால் மேலே குறிப்பிட்ட ஸ்தாபனங்களை ஜாமக்காரன் வாசகர்களாகிய உங்களுக்கு அறிமுகப்படுத்தி சிபாரிசு செய்கிறேன்.

நாம் அனுப்பும் காணிக்கை மிஷனரி ஊழியத்துக்காகவும் மிஷனரிகளுக்காகவும் மிஷனரி ஊழியம் சம்பந்தப்பட்ட ஆதிவாசி பிள்ளைகளின் படிப்புக்காகவும் பல இடங்களில் ஆதிவாசிகளுக்காக மட்டும் இயங்கப்படும் **இலவச ஆஸ்பத்திரிகளுக்காக** மட்டுமே செலவு செய்யப்படுகிறது என்பதை குறித்தும் நான் எந்த வித சந்தேகமும் இல்லாமல் அறிந்தபடியால் குறிப்பிட்ட மிஷனரி ஸ்தாபனங்களை ஜாமக்காரன் வாசகர்களுக்கு தைரியமாக சிபாரிசு செய்கிறேன். மேலும் மிக முக்கியமாக இந்த ஸ்தாபனங்களின் வரவு செலவு கணக்குகளும் ஆடிட்டர் ரிப்போர்ட்டும் வெளியரங்கமாக வெள்ளை அறிக்கையாக தங்கள் மிஷனரி ஸ்தாபன பத்திரிகையில் வெளியிடுகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட மிஷனரி ஸ்தாபனங்கள்போல் மிக நல்ல ஸ்தாபனங்கள் இந்தியாவில் இன்னும் நிறைய உண்டு. ஆனால் அவர்களின் பணித்தளங்களையோ பண விவரங்களைப் பற்றியே நான் ஆதாரபூர்வமாக அறியாதபடியாலும் அவர்களின் வங்கி விவரங்கள் நான் அறியாதபடியினாலும் அவைகளைப்பற்றி இங்கு குறிப்பிட இயலவில்லை.

முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் மேலே குறிப்பிட்ட மிஷனரி ஸ்தாபனங்களுக்கு வரும் காணிக்கை விவரங்களை இந்திய அரசாங்கத்துக்கு மறைப்பதில்லை. ராயனுடையதை ராயனுக்கும் கர்த்தருடையதை கர்த்தருக்கும் கொடுக்கவேண்டும் என்பதை நம் கர்த்தர் நமக்கு போதித்திருக்கிறார்.

வாசகர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியது. நம் காணிக்கைகளை எப்படிப்பட்ட ஊழியத்துக்கு முன்னுரிமை கொடுத்து உதவ வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம்.

எல்லாரும் ஊழியம் செய்கிறார்கள். எந்த ஊழியத்துக்கு கொடுத்தால் என்ன என்று அலட்சியம் காட்டக்கூடாது. இந்தியாவில் மத்திய அரசின் **இந்துத்துவா கொள்கையை** நாம் எல்லோரும் அறிவோம். இந்த அரசாங்கத்தின் பின்னணியில் இந்துமத தீவிரவாத கும்பல் மிக உண்ணிப்பாக கவணித்துகொண்டிருக்கிறது. இவர்கள் அனைத்து மிஷனரி ஸ்தாபனங்களை குறித்தும் மிஷனரிகள் ஊழியம் செய்யும் பணித்தளத்தை குறித்தும் நம்மைவிட புள்ளிவிவரத்தோடு அவர்களின் கம்ப்யூட்டரில் பதிய வைத்திருக்கிறார்கள். பல **கிறிஸ்தவ ஸ்தாபனங்களின்** பண வரவை பல விதத்தில் **தடை செய்துகொண்டு** வருகிறார்கள்.

பிசாசு தனக்கு கொஞ்ச காலம்தான்உண்டு என்று மிக நன்றாக அறிந்துவைத்திருக்கிறபடியால் தன்னால் இயன்ற வரை மிஷனரி ஊழியங்களை தடைசெய்வதும் மிஷனரி சபைகளை அடித்து நொருக்கி தீ வைப்பதுமாக அவன் தன்வேலையை எப்போதோ துடங்கிவிட்டான். வேதமும் இதைக்குறித்து நமக்கு பல முன் எச்சரிக்கைகளை வேதத்தில் எழுதி கொடுத்திருக்கிறார்.

ஆகவே உங்கள் காணிக்கை மிஷனரி பணிக்காக இருக்கட்டும். மற்ற ஊழியங்களுக்கு கொடுப்பதை வேண்டாம் என்று கூறமாட்டேன். ஆனால் கொடுக்கும் காணிக்கை முன்னுரிமை மிஷனரி பணிக்காக இருக்கட்டும்.

**எச்சரிக்கை**

ஆட்டுத்தோல் போர்த்திய நரிகள் சபை ஆடுகளுக்குள் புகுந்துவிட்டன. பல அற்புதங்கள் அடையாளங்கள் பெயரில் வஞ்ஜனையாக சபை விசுவாசிகளிடம் பணம் பரிக்கிறான். 1000 ரூபாய் கொடுத்தால் 10000 ருபாய். 10000 ருபாய் கொடுத்தால் 10 லட்சங்கள். கர்த்தர் உங்களுக்கு கர்த்தர் கொடுப்பார் என்று பொய் சாட்சிகளை மேடையில் சாட்சி சொல்ல ஏற்பாடு செய்கிறார்கள். பல பொய் சாட்சிகளை மேடையில் காட்டி TVயில் பேச வைத்து பயங்கரமாக மக்களை வஞ்ஜிக்கிறான்.

பணம் இரட்டிப்பு மேசடி கும்பலைப்பற்றி ஒவ்வொரு நாளும் நாம் தினசரி பத்திரிக்கைகளில் வாசிக்கிறோம். அதே முறையை பின்பற்றி சபைகளிலும் நேரடி ஒளிப்பரப்பு TVமூலம் கிறிஸ்தவர்களை ஏமாற்றுகிறார்கள். குறிப்பாக **ஜெப கோபுரங்கள்** பெயரில் **இளம் பங்காளர்** பெயரில் பிள்ளைகளின் **பரிட்சை** நேரங்களில் படிக்கும் பிள்ளைகளுக்காக விசேஷ ஜெபம் என்று கூறி வஞ்ஜித்து தங்கள் வலையில் விழ வைத்துள்ளார்கள்.

இயேசு அழைக்கிறார் **ஜெப கோபுர குடும்பம்** இப்போது **புதிய அழகு நிலைய** வியாபாரம், சமையல் கலை வியாபாரம் என்று TVயில் சுவிசேஷம் அறிவிக்கும் சேனலில் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ளார்கள். **இயேசு அழைக்கிறார்.** தம்பி பால் தினகரன் தன் இரண்டு பிள்ளைகளில் ஒருவர் பின்வாங்கி போனார். அடுத்த மகளை TVயில் கவர்ச்சி உடையில் உட்கார வைத்து, வாலிப பெண்களின் முக அழகு, முடி அழகு, உடை அழகு ஆகியவைகளுக்கு விசேஷ ஆலோசனையை அழகு டிப்ஸ் கொடுக்கவே சேனல் தொடங்கிவிட்டார். குடும்ப தலைவி சமையல் செய்வதில் உள்ள கலை நுட்பங்களை எந்த சமையல் எப்படி செய்வது . செட்டிநாடு கடாய் சிக்கன் சாம்பார் இன்னும் என்னவெல்லாமோ சமையல் டிப்ஸ் கொடுக்கிறதாக செய்திகள் வருவது மிகுந்த வேதனை கொடுக்கிறது. உண்மையில் அவர்களுக்கு சமைக்க தெரியாது என்று அவர் மாமியார் Mrs. ஸ்டெல்லா தினகரன் அவர்கள் ஏஞ்ஜல் டிவிக்கு பேட்டி அளிக்கும்போது தெளிவாக கூறியிருக்கிறார்.

இவைகள் உண்மையானால் கர்த்தரின் மனம் எப்படி வேதனைப்படும். இவர்கள் ஊழியத்துக்கு காணிக்கை அனுப்பியவர்களின் மனம் எவ்வளவாய் வேதனைப்படும். ஆவிக்குரியவர்கள் ஆவிக்குரியவைகளையே சிந்திப்பார்கள். உடைகள் விஷயத்தில் இவர் மாமியார் ஏஞ்ஜல் TVக்கு கொடுத்த பேட்டியில் மருமகள் விலையுயர்ந்த புடவைத்தான் இஷ்டப்படுவாள், என் மகள் ஸ்தானத்தில் அவர் விரும்புகிற விலை உயர்ந்த புடவைகளை நான்

வாங்கி கொடுத்தேன். எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இந்த குடும்பம் மிதந்துகொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

## மோகன் C. லாசரஸ் காணிக்கை சாட்சி

2020 மே மாதம் 17ம் தேதி மாலை சத்தியம் TV யில் சகோ. மோகன் C லாசரஸ் தன் சாட்சியை கூறிக்கொண்டு வரும்போது **நாலுமாவடியில்** திறப்பின் வாசல் கூட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து அங்கு நடந்த கூட்டங்களில் ஒரு பைசா கூட நான் காணிக்கையாக மக்களிடம் வாங்கியதில்லை. காணிக்கை பையோ, காணிக்கை பெட்டியோ, கூட்டத்தின் எந்த மூலையிலும் நாங்கள் வைத்ததில்லை. ஆனால் கர்த்தர் கூட்டத்தின் தேவைகளை அற்புதமாக சந்திக்கிறார் என்று கூறிவிட்டு இவரே ஒரு உண்மையையும் உளரிவிட்டார். அதாவது நாங்கள் கூட்டத்தில் காணிக்கை எடுப்பதில்லை. பெட்டி வைப்பதில்லை. ஆனால் **திறப்பின் வாசல்** முன்புறம் சினிமா டிக்கட் வாங்கும் **கவுண்டர்கள் போல** நிறைய அறைகளை திறந்திருக்கிறோம். காணிக்கை கொடுப்பவர்கள் வரிசையில் நின்று கவுண்டரில் காணிக்கை அளித்து ரசீது வாங்கி செல்கிறார்கள் என்று கூறியதை நானே கேட்டேன்.

இப்படிப்பட்ட ஊழியர்களை நீங்கள் அடையாளம் கண்டுகொள்வது முக்கியம். நாங்கள் வட இந்தியாவில் மிஷனரி சபைகளை உருவாக்கியுள்ளோம் என்று கூறுவது மக்கள் மிஷனரி ஊழியத்துக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள் என்பதை அறிந்ததால் அந்த ஊழியத்தையும் செய்வதாக கூறி மக்களை தன் பக்கம் இழுக்கிறார். எச்சரிக்கையாக இருப்போம், **செய்யத்தக்கவர்களுக்கு செய்யுங்கள்** என்று வேதம் கூறுகிறது.

# ONLINE BANKING (NEFT)

## Dr MGE PUSHPARAJ, SALEM - 636 005. INDIA

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

SWIFT CODE - SBININBB637- 10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

SWIFT CODE - CNRBINBBSLM -1219101013622.

# பெந்தேகோஸ்தே சபைகளின் காணிக்கை இரகசியம்

பெந்தேகோஸ்தே சபைகளான T.P.M. I.P.C., A.O.G., பூரண சுவிசேஷ சபை என்ற பெயரில் அனேக சில்லரை பெந்தேகோஸ்தே சபைகள் வீதிக்கு இரண்டு உண்டு என்பதை நாம் யாவரும் அறிந்ததே. ஆனால் மேலே குறிப்பிட்ட ஒரு சபையாவது சபை மக்கள் சபைக்கு கொடுத்த காணிக்கை, தசமபாக காணிக்கை விவரம் எவ்வளவு என்று சபை மக்களுக்கு என்றைக்காவது அறிவித்திருக்கிறார்களா?

அந்தந்த பாஸ்டர்களைத் தவிற சபை மக்கள் ஒருவரும் சபைக்கு எவ்வளவு காணிக்கை சேர்ந்தது அதை என்னவிதமாக செலவு செய்தார்கள் என்பதை அறியார்கள்.

அதே சமயம் செத்துப்போன சபைகள் என்று இவர்கள் சுட்டிகாட்டும் CSI லூத்தரன், மார்தோமா ஆகிய மெயின் லைன் சபைகள் ஒவ்வொரு வாரமும் காணிக்கை விவரம் சபை மக்கள் கேட்க ஆராதனையிலேயே வாசிப்பார்கள், நோட்டீஸ் போர்டில் ஒட்டி வைப்பார்கள். இவர்களில் பிஷப், ஆயர், லே செயலர் இப்படி பலர் பண ஊழல் செய்கிறார்கள் என்பதை நானே ஜாமக்காரனில் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் சபை மக்கள் கொடுக்கும் காணிக்கை மொத்தம் எவ்வளவு என்ற விஷயத்தில் இவர்களிடம் வெளிப்படைத்தன்மை உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆனால் அன்னிய பாஷை பேசுகிறோம், அபிஷேகம் பெற்றோம் என்று கூறி பெருமைகொள்ளும் **பெந்தேகோஸ்தே சபையில்** காணிக்கை விஷயத்தில் வெளிப்படை தன்மை இல்லையே !

இன்று CSI சபைகள் மூலமாக மிஷனரி ஊழியத்துக்கு சென்ற பட்டதாரி மிஷனரிகள் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உண்டு. வட இந்தியாவில் 4000, 6000 என்று இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளானவர்கள் ஆராதிக்கும் சபைகள் மாதா மாதம் பெருகிகொண்டே போகின்றன. இவர்களின் ஆத்தும பாரம் பெந்தேகோஸ்தே சபையினருக்கு இருந்திருந்தால் இந்திய தேசம் எப்போதே கிறிஸ்தவ தேசமாக மாறியிருக்குமே.

பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது **பெலப்பட்டு, புறப்பட்டு சாட்சியாய்** வாழ வேண்டும் என்றல்லவா வேதம் கற்பிக்கிறது.

இயேசுவின் கடைசி கட்டளை என்ன தெரியுமா? நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா. குமாரன், பரிசுத்த ஆவியின் பெயரில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்றாறே! எந்த பெந்தேகோஸ்தே சபையாவது இயேசுவின் கட்டளைக்கு கீழ்படிந்துள்ளதா? கர்த்தர் கடைசி காலத்தில் கணக்கு கேட்பாரரே! வசனத்தின்படி வாழும் சபையாக எப்போது பெந்தேகோஸ்தே சபை மாறுகிறதோ அப்போதுதான் அவர்களுக்கு பரலோகம், பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றது உண்மையானால் , அந்த அபிஷேகம் நீங்கள் மட்டும் அனுபவித்து சபைக்குள் சாட்சி சொல்ல அல்ல – புறப்பட்டு போங்கள் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். கிறிஸ்தவர்களையே கிறிஸ்தவர்களாக்கும் உபதேசம் கள்ள உபதேசம் ஆகும்.

## இந்திய சுதந்திர தினம்



இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்று தந்த தலைவர்களையும், தியாகிகளையும் வாழ்த்துகிறோம். நாம் இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமைகொள்கிறோம். இந்தியா ஜனநாயகநாடாக இருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி கூறுவோம்.



**இந்தியாவை ஆளுகிறவர்களுக்காக ஜெபிப்போம்**

**AUGUST-2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.